# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை புகையிரத சேவைகள்

### மேல் மாவட்டத்தின் நாவலப்பிட்டிய முற்றவெளிக்கு புகையிரதப் பாதை தண்டவாளங்களைப் பரீட்சிப்பதற்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கான 4000 எண்ணிக்கையான குறைந்த உயரமுடைய கொங்கிறீட் சிலிப்பர்களை வழங்குவதற்கான பெறுகை

### பெறுகை இல. SRS/F.7899

01. இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களக் கொள்வனவுக் குழு (மேஜர்) தவிசாளர், நாவலப்பிட்டிய முற்றவெளிக்கு புகையிரதப் பாதை தண்டவாளங்களைப் பரீட்சிப்பதற்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கான 4,000 எண்ணிக்கையான குறைந்த உயரமுடைய கொங்கிறீட் சிலிப்பர்களை கொள்வனவு செய்வதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை உள்நாட்டு தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார்.

02. சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மூலம் விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.

03. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து 2023.01.27ஆம் திகதி முதல் 2023.02.22ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீசித்துப் பார்க்கலாம்.

**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.**

| | | |
|---|---|---|
| **தொலைபேசி** | : | **94 (11) 2438078 அல்லது 94 (11) 2436818** |
| **தொலைநகல்** | : | **94 (11) 2432044** |
| **மின்னஞ்சல்** | : | **srs.slr@gmail.com** |
| **இணையதளம்** | : | **www.railway.gov.lk** |

04. விலைமனுதாரர்கள் கடந்த ஐந்து வருடங்களில் இலங்கை புகையிரத சேவைக்கு 5,000 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட கொங்கிறீட் சிலிப்பர்களை வழங்கியிருத்தல் அல்லது 50 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட பெறுமதியுடைய முன் வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் தூண்கள் வழங்கியிருத்தல் அல்லது 500 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய முன் வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் கம்பங்களை வழங்கியிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைப்பட்டியல்களின் பிரதிகளையும் (Copies of invoices) இணைத்தல் வேண்டும்.

05. மீளளிக்கப்படாத கட்டணமாக 30,500.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் 2023.01.27ஆம் திகதி முதல் 2023.02.22ஆம் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

06. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 1,700,000.00 ரூபா பெறுமதியுடைய நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.

07 விலைமனுக்கள் 2023.02.23ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு (மேல்நிலை),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10 இலங்கை**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை)**